

தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டத்தின் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கார் சிலைகள் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஏற்பாட்டில் புதிப்பிக்கப்பட்டு அண்ணல் அம்பேத்கர் திருவுருவ சிலையை திராவிடர்கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி திறந்து வைத்தார், தந்தை பெரியார் திருவுருவச் சிலையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் திறந்து வைத்தார். போக்குவரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாவில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், திராவிடர் கழக நிர்வாகிகள், வி.சி.க நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருவிடைமருதூர் அரசினர் கல்லூரி - முதல்வருக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம்!

### அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் – முனைவர் கோவி.செழியன் சிறப்புரை! மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமை!

தஞ்சாவூர், ஏப். 16 - தஞ்சை வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் அரசினர் கலை அறிவியல் கல்லூரி துவங்க ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதல்வருக்கும், பரிந்துரை செய்த உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டம் மல்லபுரம் ஊராட்சி, திருமலை ராஜபுரத்தில் நடைபெற்றது.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராம லிங்கம் வரவேற்புரையாற்றினார். ஊராட்சி செயலாளர்கள் ஆர்.ரமேஷ், சி. செல்வராஜ், கோ.முல்லை வேந்தன், வி.சுந்தரேசன், ஆர்.செல்வம், இ.இளங்கோவன், எம்.சிவாஜி, ஹெச்.சாதிக்பாட்சா, வெங்கடேசன், மனோகரன், ராஜன், சிவக்குமார், மகாலிங்கம், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு போக்குவரத்து துறை அமைச்சரும், அரியலூர் மாவட்டச் செயலாளருமான சா.சி.சிவசங்கர், தமிழ்நாடு அரசு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பொதுக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கும்ப கோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நசீர் முகமது, ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் ஒன்றியச் செயலாளர்கள் கூகூர் சி. அம்பிகாபதி, கோ.க.அண்ணாதுரை, மிசா.என். மனோகரன், உதயா இரவிசந்திரன், உள்ளூர் டி.கணேசன், பி.கே.ஜெ.சுதாகர் உள்ளிட்ட முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் இந்நாள் பிரதிநிதி கள், ஊராட்சிக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.வி.எஸ்.சிலம்பரசன் நன்றியுரையாற்றினார்.

### திருத்துறைப்பூண்டி முன்னாள் நகர செயலாளர்

# அரசு கூடுதல் வழக்கறிஞர் கோ.தர்மராஜன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஏப். 16 - திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தை சேர்ந்த கழக செயல் வீரர் வழக்கறிஞர் ஜிடி, என்று அன்போடு அழிக்கப்படும் கோ.தர்மராஜன் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம், அன்னாருக்கு வயது 70.



மறைந்த கோ. தர்மராஜன் அவர்கள் சட்டக் கல்லூரியில் பயின்ற போது கழக மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து கழகப் பணி ஆற்றியவர். திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தினுடைய முன்னாள் செயலாளராகவும் ,திருத்துறைப்பூண்டி வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், திருவாரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராகவும் , அமைப்பாளராகவும் , அரசு கூடுதல் வழக்கறிஞராகவும் இருந்து கழகப்பணியாற்றியவர்.

மறைந்த கோ.தர்மராஜன் அவர்களுக்கு கலைச்செல்வி என்கிற மனைவியும் கார்த்திராஜன் என்கிற மகனும் ராஜலெட்சுமி என்கிற மகளும் உள்ளனர். மறைந்த தர்மராஜன் அவர்களின் இறுதி ஊர்வலம் 17.04.2025 வியாழன் அன்று திருத்துறைப்பூண்டி ஆட்டூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்படுகிறது .



கோவை வடக்கு மாவட்டம் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி, ஆலாந்துறை பேரூர் கழக செயலாளர் A.K. ரங்கசாமி அவர்கள் மறைவையொட்டி ஆலாந்துறையில் உள்ள அவரது இல்லத்திற்கு தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி நேரில் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செய்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொண்டார் மாவட்ட கழக செயலாளர்கள் தொண்டாமுத்தூர் ரவி தளபதி முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர்.



நாகை மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கழக. தலைவர் , தமிழ்நாடு முதல்வர் தளபதி மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கீழையூர் மேற்கு ஒன்றியம், எட்டுக்குடி பாரதமாதா முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு போர்வை, வேட்டி, புடவை மற்றும் உணவு ஆகியவற்றை வாகை மாவட்ட திமுக செயலாளரும்,,தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் வழங்கினார் ,உடன் கீழையூர் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் சோ.பா. மலர்வண்ணன். பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார் ,தகவல் தொழில்நுட்ப அணி நாகை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன், ,துணை ஒருங்கிணைப்பாளர்கள் செல்வ முத்துக்குமரன், ரெக்ஸ், ஒன்றிய கழக பொருளாளர் வை. சண்முகசுந்தரம், மற்றும் பலர் உள்ளனர்



தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட பரசலூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள புதிய நூலக கட்டடத்தை திறந்து வைத்ததை தொடர்ந்து. நூலகத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன், ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்தார்கள். உடன் மாவட்ட கழகத் துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.. அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.. விஜயகுமார், மாவட்ட நூலக அலுவலர் சுமதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .சுமதி, மஞ்சுளா மற்றும் பலர் உள்ளனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி தேவனாங்குறிச்சியில் நடைபெற்ற இந்தித் திணிப்பு நிதி பகிர்வை பாரபட்சம் தொகுதி சீரமைப்பில் அநீதி செய்யும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், இளம் பேச்சாளர் க.நந்தகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் திருச்செங்கோடு ஒன்றிய கழக செயலாளர் வட்டூர் ஜி தங்கவேல, மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தென்றல் செல்வராஜ் தலைமை! கே.ஈஸ்வரசாமி எம்.பி. – தளபதி முருகேசன் துவக்கி வைத்தனர்!

# பொள்ளாச்சியில் முதல்வர் பிறந்த நாள் - கேரம் போட்டி துவக்க விழா!

### ஜி.ஏ.அதிபதி, மயூரா சுப்பிரமணியம், மு.க.முத்து, எம்.அமுதபாரதி, இரா.நவநீதகிருஷ்ணன், மணிமாறன் தென்றல் பங்கேற்பு!

பொள்ளாச்சி, ஏப். 16 - தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக சட்டதிட்ட திருத்த குழு சார்பில் தென்னிந்திய அளவிலான கேரம் இரட்டையர் பேஸ் கேம் போட்டி பொள்ளாச்சி தாலுக்கா லாரி உரிமையாளர்கள் திருமண மண்டபத்தில் கழக சட்டதிட்ட திருத்த குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது

இப்போட்டியை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி மற்றும் கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டு துவக்கி வைத்தனர்

கழக தீர்மான குழு உறுப்பினர் ஜி ஏ அதிபதி, மாவட்ட அவைத்தலைவர் மயூரா சுப்பிரமணியம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, எம்.அமுதபாரதி, பொள்ளாச்சி நகர செயலாளர் இரா.நவநீதகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் பொள்ளாச்சி நகர 13வது வார்டு செயலாளர் பூவை செல்வராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது

போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பொள்ளாச்சி நகராட்சி துணைத் தலைவர் எஸ்.கௌதமன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மருதராஜ், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில் குமார், மணிமாலா தென்றல், வட்டப் பிரதிநிதி கரியாம்பட்டி செல்வராஜ், அங்குராஜ் ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு வழங்கினர்.

நிகழ்ச்சியில் ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஹிமாலயா யுவராஜ், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ் , நகரத் துணைச் செயலாளர் தர்மராஜ் , நகர மன்ற உறுப்பினர்கள் ஸ்வீட் நாகராஜ், சு.தங்கவேல், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் அவிநாசி கார்த்திக், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் அரவிந்த் வசந்தராம், வட்டச் செயலாளர் போஜராஜன், கே.வி.பி.விஜயகுமார், முன்னாள் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சபாரி சாகுல், முன்னாள் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ரஞ்சித் , செந்தில் கணபதி, நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பைக் பாபு, நகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், கௌதம், நகர ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் லோகநாதன், ஜெ.சதிஷ், சுதீஷ் ராஜ், ஊத்துக்குளி அரவிந்த் இளைஞரணி தம்பிகள் யுவராஜ், நவீன் , தொழிற்சங்கம் தாஸ் பிரபு, கணேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதிச்சுற்று போட்டியில் முதல் இடத்தை பிடித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த அருண் மற்றும் ரசீது ஆகியோருக்கு ரூ:25,000 மற்றும் கோப்பைகள்.

இரண்டாம் இடத்தை பிடித்த கேரளா மாநிலத்தைச் சேர்ந்த சசிதரன் மற்றும் ஆஜி ஆகியோருக்கு ரூ:15,000 மற்றும் கோப்பைகள்,மூ

ன்றாம் இடத்தை பிடித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த தங்கராஜ் மற்றும் கணேசன் ஆகியோருக்கு ரூ:10,000 மற்றும் கோப்பைகள்,

நான்காம் இடத்தை பிடித்த கேரளா மாநிலத்தைச் சேர்ந்த பெரோஸ் மற்றும் அகமது ஆகியோருக்கு ரூ:5000 மற்றும் கோப்பைகள்,

ஆறுதல் பரிசாக போட்டியாளர்கள் சேட் & சின்னத்தம்பி, பாபு & சிவா, ரமேஷ் & ரஞ்சித், அருள்மொழி & காதர் ஆகிய நான்கு அணிகளுக்கு ஆறுதல் பரிசாக தலா ரூ: 1000 மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டது,

இறுதியில் வருகை தந்த அனைவருக்கும் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் நன்றி கூறினார்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கழக

# இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி– தமிழன் பிரசன்னா– ஆலந்தூர் இளமாறன் பங்கேற்பு!

நாமக்கல், ஏப். 16 - நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக ஒன்றிய, நகர, பேரூர், கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அறிமுக கூட்டம் கொங்கு சமுதாய கூடத்தில் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். பாலாஜி வரவேற்றார். மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பி. எஸ்.சீனிவாசன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார். கூட்டத்தில் திமுக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சமூக வலைதள பயிற்சியாளர் இளமாறன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் இளைஞர் அணியினர் பணியாற்ற வேண்டிய முறை குறித்தும், திமுகவின் முந்தைய கால வரலாறு குறித்தும், எதிர்காலத்தில் கட்சியை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வது தொடர்பாகவும்,

சமூக வலைதளம் வழியாக பொது மக்களுக்கு கட்சியின் கொள்கைகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்த சாதனைகள், மக்கள் நலத் திட்டங்கள் உள்ளிட்டவைகள் எடுத்துரைப்பது குறித்து புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தனர். தொடர்ந்து இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு கட்சியின் வரலாறு, வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்புப் படி 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளை வெல்வதற்கு இளைஞர் அணியினர் ஆற்ற வேண்டிய பணிகள் என்னென்ன சமூக வலைதளங்களில் இளைஞர் அணி பங்கு என்னவாக இருக்க வேண்டும் என்பது குறித்து எடுத்துக் கூறினர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மல்லை ஜெகதீஷ் குமார், கார்த்திகேயன், கதிரவன், பூக்கடை சுந்தர், நவலடி ராஜா, முரளி, நாமக்கல் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் டி.சுரேஷ்பாபு, திருச்செங்கோடு நகரக் கழகச் செயலாளர்கள் தா.கார்த்திகேயன், அ.குமார், விஜய் கண்ணன், ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், எம்.தங்கவேல், எம்.செல்வராஜ், பி.பி.தன்ராஜ், கே.கே.சண்முகம், கே.பழனிவேல் ஏ.பி.ஆர்.சண்முகம் நாச்சிமுத்து, இளங்கோவன், செல்வம், பேரூர் கழகச் செயலாளர் திருமலை, ராமமூர்த்தி, கருணாநிதி, முருகன், பெருமாள், ராமலிங்கம், கார்த்திக் ராஜா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடகோவை, கிராஸ்கட் சாலை சூலூர் மாவட்டக் கழக அலுவலகம் மற்றும் குணியமுத்தூரில் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக் தொ.அ.ரவி. தளபதி முருகேசன் ஆகியோர் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து சமத்துவநாள் உறுதிமொழி வாசித்தனர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற தலைமைக்கழக நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பகுதி பேரூர்க்கழக நிர்வாகிகள் அனைவரும் சமத்துவநாள் உறுதி மொழியை ஏற்றனர்.



பொள்ளாச்சியில் முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கழக சட்டதிட்டக் குழு சார்பில் தென்னிந்திய அளவிலான கேரம் போட்டி தென்றல் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியை கே.ஈஸ்வர சாமி எம்.பி., மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் துவக்கி வைத்தனர். ஜி.ஏ.அதிபதி, மயூரா சுப்பிரமணியம், மு.க.முத்து, எம்.அமுதபாரதி, இரா.நவநீதகிருஷ்ணன், மணிமாறன் தென்றல் நன்றி கூறினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.